# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

## கழிவு செய்யப்பட்ட வாகனங்களை ஏலம் எடுப்பதற்கான நிபந்தனைகள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்ந்த கழிவு செய்யப்பட்ட வாகனங்களை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு

பகிரங்க ஏலப்பதிவு மற்றும் முன்பணம் செலுத்தும் நாள் 13.09.2022 காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை இடம் மாவட்ட அலுவலர் அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, அசோக்நகர், சென்னை - 83

| | | |
|---|---|---|
| 01 | ஒப்பந்தப்புள்ளி படிவம் (Tender Form) கொடுக்கப்படும் ஆரம்ப நாள் | 18.08.2022 காலை 10:30 மணி முதல் |
| 02 | ஒப்பந்தப்புள்ளி படிவம் (Tender Form) கொடுக்கப்படும் கடைசி நாள் மற்றும் நேரம் | 13.09.2022 மாலை 04:00 மணி வரை |
| 03 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | 14.09.2022 மாலை 10:00 மணி வரை |
| 04 | இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறந்து பகிரங்க ஏல அறிவிப்பு செய்யும் நாள் மற்றும் நேரம் | 14.09.2022 காலை 11:00 மணி |
| 05 | விற்பனை உறுதி (வாய்மொழி) செய்யப்பட்ட வாகனங்களுக்கு முழு ஏலத் தொகையும் செலுத்த வேண்டிய நாள் மற்றும் நேரம் | ஏலம் விடப்படும் தேதியன்று மாலை 05.00 மணிக்குள் |

06. டெண்டர் படிவத்துடன் டெண்டர்தாரர் எந்த வகையான வாகனத்திற்கு டெண்டர் அளிக்க விரும்புகிறாரோ அந்த வகையான வாகன விவரங்கள் மட்டுமே அளிக்கப்படும் டெண்டர் படிவத்தின் விலை பின்வருமாறு.

| வ.எண் | வாகனங்களின் வகை | படிவத்தின் விலை |
|---|---|---|
| 01 | கனரக வாகனங்கள் HMV | ரூ.200 |
| 02 | வேன் | ரூ.100 |
| 03 | கார் மற்றும் ஜீப் வகை | ரூ.100 |
| 04 | இருசக்கர வாகனங்கள் | ரூ. 50 |

07. ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனி படிவத்தில் அந்தந்த வாகனத்திற்கான பிணைமுறித் தொகைக்கு (Deposit) குறையாத அளவில் வங்கியில் 22.08.2022 தேதி முதல் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலையை (Demand Draft) இணைத்து முத்திரையிட்ட உறையில் வைத்து அனுப்ப வேண்டும். மேலும், ஏலத்திற்கான கேட்பு வரைவோலை **Joint Director, Tamilnadu Fire and Rescue Services, Northern Region, No.17, Rukkumani laxmipathi Road, Egmore, Chennai -8** என்ற முகவரிக்கு எடுக்கப்பட்டு மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும். உறையின் மீது ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படும் வாகனத்தின் பதிவு எண்,

தயாரிப்பு (Make) ஏல அட்டவணை, வரிசை எண் ஆகியவற்றை பெரிய எழுத்துக்களில் எழுதி தெரிவிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் **Joint Director, Tamilnadu Fire and Rescue Services, Northern Region, No.17, Rukkumani laxmipathi Road, Egmore, Chennai -8** என்ற முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் மேலே வரிசை எண் 3-ல் குறிப்பிட்ட கடைசி நாளுக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். அதற்கு பின் காலதாமதமாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணத்தை கொண்டும் ஏற்கபடமாட்டாது. மேலும், உறையின் மீது மேற்படி விவரங்களை எழுதி தெரிவிக்கப்படாத உறைகள் திறக்கப்படமாட்டாது, ஏலத்தில் சேர்த்துக் கொள்ளப்படவும் மாட்டாது.

08. ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டிய பிணைமுறித் தொகையினை (EMD Deposit) விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வாகனங்களின் வகை | பிணைமுறித் தொகை (EMD) |
|---|---|---|
| 01 | கனரக வாகனங்கள் HMV | ரூ.5000/- |
| 02 | சீருந்துகள், வேன்கள், ஈப்புகள்<br>இலகுரக நான்கு சக்கர வாகனங்கள் | ரூ.2000/- |
| 03 | இரு சக்கர வாகனங்கள் | ரூ.1000/- |

இது தவிர ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக பொது ஏலத்தில் மட்டும் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட பிணை முறித் தொகையை பணமாகவோ அல்லது வரைவோலையாகவோ செலுத்தலாம்.

09. பிணைமுறித் தொகைக்கான வங்கி வரைவோலையின் பின்புறத்தில் ஏலதாரரின் பெயர், ஏல அட்டவணை வரிசை எண் மற்றும் வாகன எண் தெளிவாக குறிப்பிட வேண்டும். (ஏலதாரர் கையொப்பம் இட கூடாது)

10. பிணைமுறித் தொகைக்கான வங்கி வரைவோலைகளை மற்ற ஏலதாரருக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு மற்றும் சரக்கு மற்றம் சேவை வரி போன்றவற்றிற்காக மாற்றப்படுதல் ஏற்கப்பட மாட்டாது.

11. விற்பனைக்காக பட்டியலிட்டு (கூடிய மட்டும்) தெரிவிக்கப்படும் வாகனங்களின் பதிவு எண்/ தயாரிப்பு / மாடல் மற்றும் இருக்குமிடம் அந்தந்த வாகனங்களின் ஏல அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்திற்கு ஏல ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்பவோர் எந்தவொரு வேலை நாட்களில் வாகனங்களை சென்று பார்வையிடலாம். மேலும், வாகனங்கள் உள்ளது உள்ளபடியேயான நிலையில் (As is where is Basis) விற்பனை செய்யப்படுகிறது.

12. வாகனங்களுக்கு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கொண்ட உறைகள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஏலதாரர்கள் முன்னிலையில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலகத்தால் விளம்பரத்தில் குறிப்பிட்ட இடம் நாளில் காலை 11:00 மணி அளவில் திறக்கப்படும்.

13. அதிகபட்ச விலைப்புள்ளிகள் அளித்துள்ள டெண்டர்தாரர் அல்லது பகிரங்க ஏலம் எடுத்தவர் பெயர் தெரிவிக்கப்பட்டவுடன், அவரால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொகையை வங்கி வரைவோலையாக அல்லது ரொக்கமாக ஏலம் விடப்படும் தேதியன்று மாலை 05:00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஏலதாரர் செலுத்தியுள்ள EMD-க்கான வங்கி வரைவோலை பறிமுதல் (Forfeit) செய்யப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்படும்.

14. எந்தவொரு வாகனத்திற்கும் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி ஏற்கப்படாவிட்டால் ஏலதாரர் செலுத்தியுள்ள பிணை முறித்தொகை ஒப்பந்தப்புள்ளி உறையில் அவர் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலில் திருப்பி அனுப்பி வைக்கப்படும். முகவரி இல்லாத பிணை முறித் தொகை பறிமுதல் செய்து இத்துறையின் தலைப்பில் செலுத்தப்படும்.

15. ஏலதாரர் எந்தவொறு வாகனத்திற்கும் முழு ஏலத்தொகை செலுத்திய நாளில் இருந்து இரண்டு தினங்களுக்குள் ஏலத்தொகை மீதான சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தி வாகன விடுவிப்பு உத்தரவினை பெற்றுக் கொள்ள வேண்டும். பிணை முறித்தொகை, ஏலத்தொகை, சரக்கு மற்றும் சேவை வரி மொத்தம் மூன்று (3) வரைவேலைகள் வரை மட்டும் செலுத்தலாம் மேலும், ஆறு(6) வரைவோலைகள் கூடுதலாக ஏலதாரர் செலுத்தும் நிலையில் Processing fees ஆக ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) ரொக்கமாக கணக்கு அலுவலக பிரிவில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு, ரசீது நகலுடன் வங்கி வரைவோலைகளை சேர்த்து அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும், ஆறு வங்கி வரைவோலைகளுக்கு மேல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

16. ஏலதாரர் நிபந்தனைகளில் தெரிவித்துள்ள காலக்கெடுவிற்குள் ஏலத்தொகை, சரக்கு மற்றும் சேவை வரி செலுத்த தவறினால் அன்னார் ஏற்கனவே செலுத்திய தொகை பறிமுதல் செய்து அரசு கணக்கில் சேர்க்கப்படும். அதன் பின்னர், ஏலதாரரின் எந்தவொரு கோரிக்கையும் ஏற்கப்பட மாட்டாது.

17. பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் (AUCTION CUM TENDER) நடைபெறும் நாளுக்கு முந்தைய நாள் மாலை 4 மணி வரை தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக்கொள்ளலாம், பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் மூலம் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட வாகனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அனுப்பும்

உறைகள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் சென்று பார்வையிட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவோ அல்லது நேரிடையாக சென்று வாய்மொழி ஏலமோ கேட்க வேண்டும், பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலகத்தால் ஏல நாளில் முற்பகல் 10:00 மணி வரை பெறப்படும்.

18. ஏலத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபரிடமிருந்து நுழைவுக் கட்டணமாக ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) வசூலிக்கப்படும். இத்தொகை திருப்பித் தரப்படாத தொகையாகும். மேலும், பொது ஏலத்தில் உள்ள வாகனங்களை டெண்டர் படிவம் மூலம் ஒப்பந்தபுள்ளி கொடுக்கப்படவிருக்கம் ஏலதாரர் அந்தந்த வாகனங்களுக்கேற்ப குறிப்பிடப்பட்டுள்ள பிணைத்தொகைக்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். வெற்றி பெறும் ஏலதாரர் பொது ஏலத்தில் ஒவ்வொரு வாகனத்திற்கும் அவர் ஏலத்தில் கோரிய தொகையை ஏலம் நடந்த நாளன்று மாலை 05:00 மணிக்குள் செலுத்த வேண்டும்.

19. E.M.D தொகைக்கான வங்கி வரைவுகள் அறிவிக்கப்பட்டுள்ள ஏலம் நடைபெற உள்ள நாளுக்கு முன்னர் 15 நாட்களுக்குள் எடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும் ஏலத்திற்கு உண்டான வரைவோலைகள் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலகத்தில் ஏலம் நடைபெற உள்ள நாளுக்கு முன்னர் 15 நாட்களுக்குள் எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

20. மொத்த ஏலத்தொகையும், சரக்கு மற்றும் சேவை வரியும் தனித்தனி காசோலையாக பாக்கி இல்லாமல் செலுத்திய ஏலதாரருக்கு செலுத்திய வங்கி வரைவோலைகள் வங்கியில் செலுத்தப்பட்ட Remittance தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலக கணக்குப் பிரிவிலிருந்து பெறப்பட்ட பின்பு 15 நாட்களுக்குள் நேரடியாக ஏலதாரரின் மாதிரி கையொப்பம் வாகன விடுவிப்பு ஆணை படிவத்தில் பெறப்பட்டு வழங்கப்படும்.

21. வெற்றி பெறும் ஏலதாரர் ஒப்பந்தப் படிவத்தில் இடப்பட்ட கையொப்பமும், வாகன விடுவிப்பு, உத்தரவில் இடப்படும் கையொப்பமும் வித்தியாசப்படுமாயின் வாகன விடுவிப்பு உத்தரவு வழங்கப்பட மாட்டாது.

22. ஏலதாரார் டெண்டர் படிவம் சமர்ப்பிக்கும்போது கீழ்காணும் அடையாள ஆவணங்களான 1. ஆதார் அட்டை 2. பாஸ்போர்ட் 3. ஓட்டுநர் உரிமம் 4. வாக்காளர் அடையாள அட்டை 5. பான் அட்டை 6. அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் சுய கையொப்பமிட்ட நகலுடன் ஏலப்பட்டியலுடன் சமர்ப்பிக்கும்பொழுது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு உரிய மேற்கூறப்பட்ட அடையாள ஆவணங்களின் நகல்கள் மற்றும் நபரினை அங்கீகரித்து நிறுவனம் அளித்துள்ள கடிதத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், வாகன விடுவிப்பாணை வழங்கும்போது, ஏல

விண்ணப்பம் சமா்ப்பிக்கும்போது அளித்திருந்த மேற்கூறப்பட்ட புகைப்பட ஆதாரங்களின் அசல் ஆவணங்களை சமா்ப்பித்து விடுவிப்பாணை பெற வேண்டும்.

23. வாகன விடுவிப்பு ஆணை ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயருக்கு வழங்கப்படாது. அண்ணாரின் அங்கீகாரம் பெற்றவரின் பெயருக்கு விடுவிப்பு ஆணை வழங்க வேண்டுமெனில் அங்கீகாரம் பெற்றவரின் அடையாளத்தை காட்டும் வகையில் கீழ்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றில் ஓா் அரசு பதிவு பெற்ற அதிகாரியின் சான்றொப்பம் பெற்று சமா்ப்பித்தால் மட்டுமே அங்கீகாரம் அளித்தவரின் பெயரில் வாகன விடுவிப்பு ஆணை வழங்கப்படும். அடையாளத்தை காட்டுகின்ற ஆவணங்கள் கீழ்வருவன,

1. ஆதாா் அட்டை 2. பாஸ்போா்ட் 3. ஓட்டுநா் உரிமம் 4. வாக்காளா் அடையாள அட்டை 5. பான் அட்டை 6. அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள்.

24. இந்த அலுவலகத்திலிருந்து வாகன விடுவிப்பு பெற்றுக்கொண்ட 45 தினங்களுக்குள் ஏலதாரா் வாகன இருக்குமிடம் சென்று வாகனத்தை பெற்றுக் கொள்ள வேண்டும், 45 நாட்கள் கடந்தும் வாகனத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால் ஏற்படும் கால தாமதத்திற்கு கொட்டகை வாடகை நாளொன்றிற்கு ரூ.100/-வீதம் வசூலிக்கப்படும். மேலும் 60 நாட்கள் இரண்டு மாத காலம் கொட்டகை வாடகை தொகை செலுத்தி பெற்றுக் கொள்ள கால அவகாசம் வழங்கப்படுகிறது. அந்த காலத்திற்குள் ஏலதாரா் வாகனத்தை விடுவித்துக் கொள்ளவில்லையென்றால் அவ்வாகனங்களை ஏலதாரா் எடுத்துக் கொள்ள விரும்பாதவாராக உள்ளாா் என கருதப்பட்டு மறு ஏலத்தில் சோ்த்து விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஏலதாரா் செலுத்திய தொகை அரசு கணக்கில் சோ்க்கப்படும் என்பதை ஏலதாரா்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்கண்டாவாறு உரிய காலத்திற்குள் வாகனத்தை டெலிவரி எடுத்துக் கொள்ளாத ஏலதாரரால் தெரிவிக்கப்படும் எந்த கோரிக்கையையும் ஏற்கப்படமாட்டாது. மேலும், Central Motor Vehicle Rules 1989, விதி எண் 57(1)ன் படி வாகனத்தை டெலிவரி எடுத்த ஏலதாரா் வாகனம் டெலிவரி எடுத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் Central Motor Vehicle Rules 1989, விதி எண் 32ன் படி தொடா்படைய RTO அலுவலகம் மூலம் வாகனத்தின் G.Surrender சான்றிதழை வைத்து வாகனம் உரிமையாளரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். மாற்றம் செய்யப்பட்ட விவரத்தினை சம்பந்தப்பட்ட வாகன அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும், இவ்வாறு மாற்றம் செய்யப்படாமல் வாகனத்தை பயன்படுத்தினால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஏலதாரரே முழுப் பொறுப்பு எனவும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பொறுப்பு ஏற்க இயலாது என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

25. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை வாகனத்தை இவ்வலுவலக விடுவிப்பாணை மூலம் டெலிவரி எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னா், அந்த வாகனத்திற்கு ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏலதாரரே முழுப் பொறுப்பாவாா் எனவும், வாகனம் டெலிவரி கொடுத்த

பின்னர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை எந்த விதத்திலும் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

26. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடும் தொகையானது விற்பனை வரி சேராத நிகர தொகையாகும்.

27. சரக்கு மற்றும் சேவை வரியானது அரசின் ஆணைப்படி அவ்வப்போது அமலில் இருக்கும் விகிதத்தின்படி வசூலிக்கப்படும்.

28. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் மட்டுமே கையொப்பமிட்டு இருக்க வேண்டும். வேறொருவர் கையொப்பம் இட்டு இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். EMD தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

29. ஏலதாரர்கள் ஒரு வாகனத்திற்கு இருவர் ஒரே விலைப்புள்ளியை (TIE rate) குறிப்பிட்டிருக்கம் பட்சத்தில் கீழ்கண்டவாறு ஏலக்குழுவின் முன்னிலையில் விலை நிர்ணயம் செய்யப்படும். ஒரே விலை கோரியுள்ள ஏலதாரர்கள் கீழ்குறிப்பிட்டிருக்கும் தொகையின் மடங்கில் விலைப்புள்ளியை டெண்டர் படிவத்தில் குறிப்பிட்டு ஏலக்குழுவினரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதை ஏலக்குழுவினர் ஏலதாரர்கள் முன்னிலையில் உறையை பிரித்து விலைப்புள்ளியில் கோரியுள்ள தொகையை அறிவிக்க வேண்டும்.

1. Motor Cycle - இருசக்கர வாகனம் - ரூ.100/- குறைந்தபட்ச கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

2. Light Motor Vehicle - இலகுரக வாகனம் - ரூ500/- குறைந்தபட்ச கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

3. Heavy Vehicles – கனரக வாகனம் - ரூ.1000/- குறைந்தபட்ச கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

மேற்சொன்ன முறையில் மீண்டும் ஒரே விலைப்புள்ளி (TIE rate) ல் இரு ஏலதாரர்களும் விலைப்புள்ளி அளிக்கும் பட்சத்தில் டெண்டர் கமிட்டி முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

30. இந்த ஏல நிபந்தனையுடன் வாகனங்களின் விவரமும் அவைகள் இருக்கும் இடமும், இந்த அலுவலகத்தில் வாகனம் உள்ள நிலைப்படியே வாகனப்பட்டியல் தயாரித்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், வாகனங்களுக்கு ஒப்பந்தபுள்ளி கொடுக்கும் ஒவ்வொரு ஏலதாரரும் வாகனத்தை நேரில் பார்த்து மற்றும் ஆவணங்கள், பதிவுச் சான்று போன்றவற்றை சரிபார்த்த பின்னர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. வாகனத்தை பார்வையிடாமலும், ஆவணங்களை சரிபார்க்காமலும், அட்டவணையில் உள்ள விவரங்களை

மட்டும் கொண்டு விலைப்புள்ளி கொடுத்து ஏற்படும் தவறுகளுக்கு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை எந்த விதத்திலும் பொறுப்பேற்காது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆகையால், ஏலதாரா் வாகனத்தை பார்வையிட்டு கொடுக்கப்பட்ட விபரங்களை உறுதி செய்து மன நிறைவு கொண்டால் மட்டுமே விலைப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.

31. ஏலதாரா்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வாகனங்கள் குறித்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் ஒவ்வொரு ஏலதாரரும் பார்வையிட்டு தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் வாகனங்கள் உள்ளபடியான நிலையில் உள்ளதா என சரிபார்த்து கொண்டு கையொப்பமிட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கழிவு வாகனங்கள் பதிவேட்டில் கையொப்பமிடாமல், அவ்வாகனத்தை பார்வையிடாமல் ஒப்பந்தபுள்ளி கொடுத்து அதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு இவ்வலுவலகம் எந்த பொறுப்பும் ஏற்காது. வாகனங்கள் உள்ளது உள்ளபடியான நிலையிலேயே ஏலத்திற்கு விடப்படுகிறது.

32. மேற்படி, நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் உறுதியாக்கம் செய்து விடுவிப்பு உத்தரவுகள் வழங்கப்பட்டபின் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் அது தொடர்பான ஏதேனும் குறைகள் இருந்தால் அது தொடர்பான வழக்குப்பதிவு செய்வதாக இருப்பின் அவ்வழக்கானது உயர்நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று இதன் மூலம் ஏலதாரா்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

33. எந்தவொரு ஊர்திக்கும் பெறப்படும் விலைப்புள்ளியை ஏற்கவோ அல்லது எந்த காரணமும் குறிப்பிடாமல் நிராகரிக்க தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை ஏலக்குழு தலைவா் முழு அதிகாரம் பெற்றவா் என அறிவிக்கப்படுகிறது.

34. விளம்பரம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தை எந்த நேரத்திலும் நாள் மற்றும் நேரம் மாற்றி அமைக்க அல்லது முற்றிலும் ரத்து செய்ய தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை ஏலக்குழு தலைவா் முழு அதிகாரம் பெற்றவா் என அறிவிக்கப்படுகிறது.

<u>**Table - 1**</u>

| S.No | Type of Vehicle | Regn No | Model (Year) | Parking place |
|---|---|---|---|---|
| 1 | Ashok Leyland (comet) MTU | TN38G0569 | 2004 | Washermenpet Fire Station<br>14/25, Walltax road, Kondithope, Chennai-600079 |
| 2 | Ashok Leyland MTU | TN38G0589 | 2004 | Washermenpet Fire Station<br>Fire Station,<br>14/25, Walltax road, Kondithope, Chennai-600079 |
| 3 | Ashok Leyland MTU | TN38G0595 | 2004 | Vyasrpadi  Fire Station, No1 MelapattiPoonapaMudhli (MVM) st, Vyasrpadi, Chennai- 600039 |
| 4 | Ashok Leyland MTU | TN38G0575 | 2004 | VOC Nagar Fire and Rescue Station,No,Sathymoorthynagar, Vyasarpadi, Chennai-39 |
| 5 | Ashok Leyland MTU | TN38G0574 | 2004 | Washermenpet Fire Station,<br>14/25, Walltax road, Kondithope, Chennai-600079 |
| 6 | Ashok Leyland MTU | TN38G0591 | 2004 | Teynampet Fire & Rescue Station,<br>26, 2J4, Anna Salai, Chokkalingam Nagar, Teynampet, Chennai-600086 |
| 7 | Ashok Leyland MTU | TN38G0586 | 2004 | Guindy<br>Fire & Rescue Station,<br>2667+W3P, Alandur Road, Sidco Industrial Estate,<br>Guindy<br>Chennai-600032 |
| 8 | Ashok Leyland MTU | TN38G0593 | 2004 | Guindy<br>Fire & Rescue Station,<br>2667+W3P, Alandur Road, Sidco Industrial Estate,<br>Guindy<br>Chennai-600032 |
| 9 | Ashok Leyland MTU | TN38G0576 | 2005 | Guindy<br>Fire & Rescue Station,<br>2667+W3P, Alandur Road, Sidco Industrial Estate,<br>Guindy<br>Chennai-600032 |
| 10 | Ashok Leyland MTU | TN38G0590 | 2004 | Rajbhavan Fire & Rescue Station, $2^{nd}$ Main Gate,<br>Rajbhavan, Chennai,22 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Ashok Leyland MTU | TN38G0571 | 2004 | Mint Barrackks, Fire and rescue service, No.127, Basin Bridge Road, Old Washernmenpet, Chennai-21 |
| 12 | Ashok Leyland MTU | TN38G0592 | 2004 | Egmore Fire & Rescue Station, No.17, Rukkumani laxmipathi Road, Egmore, Chennai-8 |
| 13 | Ashok Leyland MTU | TN38G0585 | 2004 | Villivakkam Fire and Rescue Station, 93/9, Sidco Nagar, 4th main road, villivakkam, Chennai-49 |
| 14 | Ashok Leyland MTU | TN38G0573 | 2004 | State Work Shop Fire & Rescue Service, (opp) 10/11 Driver St, Pudupet, Chennai – 2 |
| 15 | Ashok Leyland MTU | TN38G0579 | 2004 | Kilpakkam Fire & Rescue Station, 157/B, Poonamalli High road,(opp KMC hospital) Chennai-10 |
| 16 | Ashok Leyland MTU | TN38G0584 | 2004 | J J Nagar fire and rescue station, Seethakadhi salai, Mogapair East, Chennai-37 |

# Table - 2

## Details of the Condemned Vehicles

| S.No | Type of Vehicle | Regn No | Model (Year) | Parking place |
|---|---|---|---|---|
| 1 | Ashok Leyland Water Lorry | TN01G2513 | 2004 | Guindy<br>Fire & Rescue Station,<br>2667+W3P, Alandur Road, Sidco Industrial Estate,<br>Guindy<br>Chennai-600032 |
| 2 | Ashok Leyland Water Lorry | TN01G2500 | 2004 | Guindy<br>Fire & Rescue Station,<br>2667+W3P, Alandur Road, Sidco Industrial Estate,<br>Guindy<br>Chennai-600032 |
| 3 | Ashok Leyland Water Lorry | TN01G2496 | 2004 | Guindy<br>Fire & Rescue Station,<br>2667+W3P, Alandur Road, Sidco Industrial Estate,<br>Guindy<br>Chennai-600032 |

## Table - 3

## Details of the Condemned Vehicles

| S.No | Type of Vehicle | Regn No | Model (Year) | Parking place |
|---|---|---|---|---|
| 1 | Ashok Leyland Foam Tender | TN38G1336 | 1999 | Washermenpet<br>14/25, Walltax road, Kondithope, Chennai- 600079 |

# Table - 4

## Details of the Condemned Vehicles

| S.No | Type of Vehicle | Regn No | Model (Year) | Parking place |
|---|---|---|---|---|
| 1 | Swaraj Mazda Ambulance | TN01G1052 | 1999 | Washermenpet fire and rescue station, 14/25, Walltax road, Kondithope, Chennai-600079 |
| 2 | Force Motor Ambulance | TN01G3620 | 2007 | Egmore fire and rescue station, Rukkmani lakshmipathy salai, Egmore, Chennai-08 |
| 3 | Swaraj Mazda Ambulance | TN01G1054 | 1999 | Triplicane Fire and Rescue station, A1,A2 Wallajja road, Triplicane , chennai02 |
| 4 | Swaraj Mazda Ambulance | TN01G1049 | 1999 | Ambattur Fire & Rescue Station Ambit Road, Ambattur, Industrial Estate, Ambattur -58 |
| 5 | Swaraj Mazda Ambulance | TN01G1048 | 1999 | Ennore Fire & Rescue Station, ETPS, Ennore, Chennai-57 |

# Table - 5

## Details of the Condemned Vehicles

| S.No | Type of Vehicle | Regn No | Model (Year) | Parking place |
|---|---|---|---|---|
| 1 | Ashok Leyland Recovery Crane | TN38G0505 | 2000 | Koyambedu Fire and Rescue Station, E-road, (Opp Koyambedu market campus) Koyambedu, Chennai-107 |